நாளிட்ட அரசாணை எண். 305-ன்படி திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்தின் உறுப்பினர்கள் பதவியில் ஏற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு—

1. திரு. ஜி. ராமசாமி
2. திரு. ந. சோமசுந்தரம்
3. திருமதி ஜோதி வெங்கடாசலம்.

ஆகிய உறுப்பினர்களை மேற்படி வாரியத்தின் உறுப்பினர்களாக இப்பேரவை தேர்ந்தெடுத்தபடியாலும்;

மேற்கண்ட பிரிவின் (2) உட்பிரிவைச் சேர்ந்த (எப்) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் மேற்கண்ட பிரிவின் உட்பிரிவைச் சேர்ந்த 5 (பி) பகுதியின்படி 31— 1— 1966-ம் நாளன்று முடிவடைந்துவிட்டபடியாலும்;

1959 ஆம் ஆண்டு, தமிழ் நாடு நில மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (எப்) பகுதியையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு நாளன்று மேற்கண்ட வாரியத்தின் உறுப்பினர்களாக இருக்கும்படி சட்ட மன்றப் பேரவையின் மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க இப்பேரவை முற்படவேண்டும் என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

(5). அறிவிப்பு.

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கிணங்க தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வேட்பாளர் நியமனத்தாள்களை 11— 3— 1978, சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்க்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 13— 3— 1978, திங்கள் கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துககொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 14— 3— 1978, செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு மேற்படுமாயின் 18—3—1978, சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் உள்ள குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(6) 1978-79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

''மானியக் கோரிக்கை எண் 29— தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,41,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இராணிப்பேட்டையில் ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை கட்டத் தவறியது குறித்து விவாதிக்க—''மானியக் கோரிக்கை எண் 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,41,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் ; தலைவரவர்களே, தொழிலாளர்களுக்கு பல சலுகைகள் அளிக்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க— ''மானியக் கோரிக்கை எண் 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,41,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி.கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, லேபர் கமிஷனர், லேபர் ஆபீசர்கள், இதர அதிகாரிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்க வேண்டிய அவசியத்தைப்பற்றி விவாதிக்க— '' மானியக் கோரிக்கை எண் 29. தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,41,76,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்'' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.